**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**&**
**இந்திய வானிலைத் துறை**
**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை**
**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**
**(06.07.2024 முதல் 10.07.2024)**

**அறிக்கை எண் 054/2024** **தேதி.05.07.2024**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 32°செ முதல் 40°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 30°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேரவெப்பநிலை 18°செ முதல் 22°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 12°செ முதல் 14°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் பரவலாக மழை பெறப்பட்டது.

**கோயமுத்தூர் மாவட்டத்தின் கடந்தவார வானிலை**

கோயமுத்தூர் மாவட்டத்தின் 02.07.24 முதல் 04.07.24 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 29°செ முதல் 34°செ ஆகவும் இரவுநேரவெப்பநிலை 23°C to 24°C ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 86 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 56 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 14-19 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்த வார வானிலை (02.07.2024 முதல் 04.07.2024) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 10.07.2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 02/07 | 03/07 | 04/07 | தேதி | நாள்-1 06/07 | நாள்-2 07/07 | நாள்-3 08/07 | நாள்-4 09/07 | நாள்-5 10/07 |
| 3.9 | 3.5 | 5.1 | மழை (மி.மீ) | 4 | 4 | 8 | 5 | 1 |
| 29 | 34 | 33 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 34 | 34 | 33 | 33 | 32 |
| 23 | 24 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 24 | 23 | 23 | 23 | 23 |
| 8 | 6 | 7 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 7 | 7 | 8 | 7 |
| 86 | 83 | 85 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 80 | 80 | 80 | 80 |
| 71 | 56 | 67 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 70 | 70 | 60 | 60 | 60 |
| 19 | 18 | 14 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 16 | 18 | 18 | 16 | 16 |
| 230 | 230 | 230 | காற்று வீசும் திசை | 250 | 250 | 250 | 250 | 250 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (06.07.2024 முதல் 10.07.2024)**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்சவெப்பநிலை 32°செ முதல் 34°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ முதல் 24°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று

வீசக்கூடும்.

| கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ளஅடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | ஆனைமலை | அன்னூர் | காரமடை | கிணத்துக்கடவு | மதுக்கரை | பெரியநாயக்கன்பாளையம் | பொள்ளாச்சிவடக்கு | பொள்ளாச்சிதெற்கு | சர்க்கார் சாமக்குளம் | சுல்தான்பேட் | சூலூர் | தொண்டாமுத்தூர் |
| **06-07-2024** | 0.1 | 0.4 | 1.1 | 0.3 | 0.8 | 1.6 | 0.0 | 0.0 | 0.9 | 0.2 | 0.6 | 1.9 |
| **07-07-2024** | 1.0 | 0.6 | 0.4 | 1.9 | 3.4 | 2.5 | 0.0 | 0.4 | 2.0 | 1.9 | 2.8 | 6.3 |
| **08-07-2024** | 1.9 | 0.4 | 0.4 | 2.0 | 3.7 | 3.3 | 0.0 | 0.1 | 2.8 | 6.1 | 6.1 | 7.5 |
| **09-07-2024** | 0.9 | 0.0 | 1.0 | 0.1 | 1.1 | 3.6 | 0.0 | 0.0 | 1.9 | 0.1 | 0.3 | 4.4 |
| **10-07-2024** | 0.1 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | வரும் 5 நாட்களில் மேற்கு மண்டலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் தூறல் (அ) லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. மேற்குதொடர்ச்சி மழையினை ஒட்டியுள்ள பகுதிகளில் மிதமானமழை எதிர்பார்க்கப்படுகிறது. காற்றின் வேகமானது மணிக்கு 10 - 18 கி.மீ வரை எதிர்பார்க்கப்படுகிறது.<br>மண் ஈரத்தினை பொறுத்து இறவைப் பயிர்களுக்கு நீர்ப்பாசனம் மேற்கொள்ளவும்.<br>மருந்து தெளிப்பினை காலை நேரங்களிலோ (அ) 3-4 மணிநேரம் மழையில்லாத வானிலை எதிர்பார்க்கப்படும்போது மட்டும் மேற்கொள்ளலாம். |
| கரும்பு | வளர்பருவம் | உள்ளுர் பகுதிகளில் அதிவேகக் காற்று மற்றும் லேசான மழை பொழிய வாய்ப்புள்ளது, எனவே கரும்பில் எதிரெதிர் வரிசைகளை விட்டம் கட்டி காற்றினால் சாயமல் பாதுகாக்கவும்.<br>கரும்பில் குருத்து மாவுப்பூச்சியையும் பொக்கோ போயங் நோயை கட்டுப்படுத்த இமிடாகுளோபிரிட் 17.8 SL @ 0.3மில்லி / லிட்டர் + புரபிகோனசோல் @ 25 SC @ 1ml / லிட்டர் தெளிக்கவும். மேலும் நன்கு வளர கரும்பு பூஸ்டரை 1 கிலோ 1.5 கிலோ, 1.5 கிலோ மற்றும் 2 கிலோவை 40, 60 மற்றம் 75 நாட்கள் முறையே ஒரு ஏக்கருக்கு கைதெளிப்பானை கொண்டு தெளிக்கவும். |
| பருத்தி | விதைப்பு | எதிர்பார்க்கப்படும் மழையினை பயன்படுத்தி குளிர்கால கம்போடியா பருத்தி விதைப்பிற்கான நிலம் தயாரிக்கவும். விதைப்பினை வரும் ஆகஸ்டு 15ம் தேதிக்குள் முடிக்கவும்.<br>வாடல் நோயை மேலாண்மை செய்ய டிரைக்கோடெர்மா விரிடியை ஒரு ஏக்கருக்க 2.5 கிலோவை 250 கிலோ தொழு உரத்துடன் கலந்து வேர்பகுதியில் இடவும். |
| கொடி பூசணி | விதைப்பு | எதிர்பார்க்கப்படும் மழையினை பயன்படுத்தி கொடி பூசணி வகைகளை போதுமான வடிகால் வசதி செய்து விதைக்கவும். |

| | | |
|---|---|---|
| வெங்காயம் | வளர் பருவம் | நிலவும் வானிலையில் வெங்காயத்தில் இலைப்பேன் தாக்குதல் அதிகமாக வாய்ப்புள்ளது. கண்காணித்து தேவைப்பட்டால் ஒரு லிட்டர் நீரில் டைமெத்தோயேட் 1மிலி கலந்து தெளிக்கவும்.<br>வெங்காயத்தில் கோழிக்கால் நோயை கட்டுப்படுத்த மேன்கோசெப் + கார்பன்டசிம் கலவையை கிராம் / லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். |
| வாழை | வளர்பருவம் | எதிர்பார்க்கப்படும் மணிக்கு 10 -24 கிமீ வரை வேக காற்றினை கருத்தில் கொண்டு 5 மாத வயதுடைய வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.<br>வாடல் நோயை மேலாண்மை செய்ய டிரைக்கோடெர்மா விரிடியை ஒரு ஏக்கருக்க 2.5 கிலோவை 250 கிலோ தொழு உரத்துடன் கலந்து வேர்பகுதியில் இடவும். |
| திராட்சை | | பருவமழை கால திராட்சையில் காய்ந்த மற்றும் வளர்ச்சியில்லாத கிளைகளை கவாத்து செய்ய இது நல்ல தருணமாகும்.<br>ஆசாக்ஸிஸ்ட்ரோபின் 25 SC @ 1அட / லிட்டர் என்ற அளவில் தெளித்து அடிச்சாம்பல் மற்றம் சாம்பல் நோய்களை கட்டுப்படுத்தவும். |
| மஞ்சள் | வளர்பருவம் | எதிர்பார்க்கப்படும் சாதகமான வானிலையினைப் பயன்படுத்தி 30 மற்றும் 60 நாட்களுக்கு மேலான மஞ்சளுக்கு ஒரு ஏக்கருக்கு 22 கிலோ யூரியாா, 72 கிலோ பொட்டாஷ் உரங்களை மேலுரமாக இடவும்.<br>கிழங்கு அழுகல் நோயை கட்டுப்படுத்த டிரைக்கோடெர்மா விரிடியை ஒரு ஏக்கருக்க 2.5 கிலோவை 250 கிலோ தொழு உரத்துடன் கலந்து வேர்பகுதியில் இடவும். |
| கால்நடைகள் | | காற்றின் வேகம் அதிகமாக காணப்படுவதால் கோழிகளின் தீவனங்கள் சிதற வாய்ப்புள்ளது. எனவே காற்றின் வேகத்தை குறைக்க கோழிக்கூடாரங்களில் சுற்றிலும் சாக்கு பைகளை தொங்கவிடவும்.<br>வேகமான காற்றினால் கால்நடைகளுக்கு ஏற்படும் நாவறட்சினைப்போக்க கால்நடைகளுக்கு போதிய குளிர்ந்த நீர் அளிக்கவும்.<br>எதிர்பார்க்கப்படும் காற்றின் அதிக ஈரப்பதத்தின் காரணமாக பால் மாடுகளில் பால் கறப்பதற்கு முன்பும் கறந்த பின்பும் மடுவினை பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசலை கொண்டு கழுவி மடுவீக்க நோய் வராமல் தவிர்க்கவும். |

## குறுஞ்செய்தி

- நிலவும் வானிலையில் வெங்காயத்தில் இலைப்பேன் தாக்குதல் அதிகமாக வர வாய்ப்புள்ளது. கண்காணித்து தேவைப்பட்டால் ஒரு லிட்டர் நீரில் டைமெத்தோயேட் 1மிலி கலந்து தெளிக்கவும்

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**